அகளங்கனின்

சின்னஞ் சிறிய சிறகுகள்

சின்னஞ் சிறிய சிறகுகள்

கலாநிதி அகளங்கன்

வெளியீடு : 73

பிரியா பிரசுரம்

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
WRITERS MOTIVATION CENTRE
இல.64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி
மட்டக்களப்பு, இலங்கை
தொ.பே. 065-2226658, 077-6041503
e-mail : okkuna@gmail.com

தலைப்பு	:	சின்னஞ் சிறிய சிறகுகள்
விடயம்	:	குழந்தைப் பாடல்
நூலாசிரியர்	:	கலாநிதி அகளங்கன் ©
வெளியீடு	:	எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் (பிரியா பிரசுரம்-73)
பதிப்பு	:	2012
கணினி வடிவமைப்பு	:	மைசொஃப்ட்-2யு, 077 55 214 55
அச்சகம்	:	ஏ.ஜே.
விலை	:	300/-

SINNACH SIRIYA SIRAHUHAL

CHILDREN SONG

AUTHOR	:	DR. AHALANGAN ©
PUBLICATION	:	WRITERS MOTIVATION CENTRE (PRIYA PIRASURAM-73)
EDITION	:	2012
COMPUTER DESIGN	:	MYSOFT-2U, 077 55 214 55
PRINTERS	:	A.J
PRICE	:	300/-

ISBN 978-955-8715-84-0

அம்புலி மாமா...

அம்புலி மாமா வா! வா! வா!
ஆசை முத்தம் தா! தா! தா!
இங்கே ஓடி வா! வா! வா!
ஈடு இல்லா வெண்ணிலவே
உன்னைச் சேர்த்து விளையாட
ஊரார் எல்லாம் கூப்பிடுவார்
என்னை மறவாது இங்கேவா
ஏங்க வைத்து மறையாதே
ஐயோ உன்னைக் கார்மேகம்
அள்ளிக் கொண்டு செல்கிறதே
ஒன்றும் இல்லைத் தப்பிவிட்டாய்
ஓடும் மேகம் போயிற்றே
ஔவைப் பாட்டி அங்குளரா?
அஃதை எனக்குச் சொல்வாயா?

கண்ணன்

க ண்ணன் எங்கள் கண்ணனாம்
கா ர்முகில் போல் வண்ணனாம்
கி ருஷ்ணன் என்னும் பெயரிலே
கீ தை சொன்ன கண்ணனாம்
கு தித்துப் பாம்பின் தலையிலே
கூ த்து ஆடும் கண்ணனாம்
கெ ட்டிக் காரன் என்றாலும்
கே ட்டு வாங்கித் தின்னாமல்
கை யால் வெண்ணெய் திருடியே
கள்ளஞ் செய்யும் கண்ணனாம்
கொ டிய போரை நீக்கவே
கோ பம் பாவம் நீக்கவே
கௌ ரவர்க்குத் தூது சென்ற
கண்ணன் எங்கள் கண்ணனாம்.



எண்கள்

ஒன்று இரண்டு மூன்று
ஓடிக் காலை ஊன்று

நான்கு ஐந்து ஆறு
நல்ல பழச் சாறு

ஏழு எட்டு ஒன்பது
என்ன இனிச் சொல்வது

பத்து விரல் பொத்து
பவள மல்லிக் கொத்து

கன்றுக் குட்டி

என் அருமைக் கன்றுக் குட்டி
என் அருமைக் கன்றுக் குட்டி
என்னோடு நீ பள்ளிக்கூடம்
வருவாயா - அங்கே
எண்ணும் எழுத்தும் சொல்லித் தருவார்
படிப்பாயா?

என் அருமைக் கன்றுக் குட்டி
என் அருமைக் கன்றுக் குட்டி
என்னோடு நீ பள்ளிக்கூடம்
வருவாயா - அங்கே
இனிய தமிழ் சொல்லித் தருவார்
படிப்பாயா?

என் அருமைக் கன்றுக் குட்டி
என் அருமைக் கன்றுக் குட்டி
என்னோடு நீ பள்ளிக்கூடம்
வருவாயா - அங்கே
இங்கி லீசும் சொல்லித் தருவார்
படிப்பாயா?

பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி
பாட்டுப் பாடும் பாட்டி
வீட்டில் உள்ள யாவரும்
விரும்பும் நல்ல பாட்டி

காலை மெல்ல நீட்டி
கையை மேலே காட்டி
உணவை அள்ளி ஊட்டி
உறங்கச் செய்யும் பாட்டி

கதைகள் சொல்லும் பாட்டி
கவலை போக்கும் பாட்டி
எதை விரும்பிக் கேட்டாலும்
எடுத்துத் தரும் பாட்டி

எட்டி எட்டித் துரத்தி
என்னைப் பிடிக்கும் பாட்டி
கட்டி என்னை அணைத்து
கண்ணீர் துடைக்கும் பாட்டி

பசு

பச்சைப் புல்லை நான் தருவேன்
பால் தருவாயா-பசுவே
பால் தருவாயா
மிச்சப் பாலை எனக்குத் தந்தால்
நானும் குடிப்பேன்-பாலை
நானும் குடிப்பேன்

கன்றுக் குட்டி இடித்து முட்டிக்
குடிப்பதைப் பார்த்தேன்-பாலைக்
குடிப்பதைப் பார்த்தேன்
என்றும் என்னால் இடித்து முட்டிக்
குடிக்க ஏலாதே-பாலைக்
குடிக்க ஏலாதே

அம்மா கறந்து காய்ச்சிப் பாலில்
சீனியும் போட்டு-அளவாய்ச்
சீனியும் போட்டு
அணைத்து எனக்குக் குடிக்கத் தந்தார்
அமுதமாய் ஆச்சு-அதுவே
அமுதமாய் ஆச்சு

குயில்

மா மரத்திலே இருந்து கூவும்
மாமரக் குயிலே - நான்
மண்டி போட்டு ஆடப் போறேன்
மறுக்காமல் பாடு

ஏன் இப்படிக் கூவுகிறாய்
எனக்கதைச் சொல்லு - உன்
இனிமையான குரலைக் கேட்க
இனிக்குது நெஞ்சு

எங்கே சென்று இந்தப் பாடல்
படித்தாயோ சொல்லு - அந்த
இரக சியத்தை இங்கே வந்து
என்னிடம் சொல்லு

சொந்தம்

நாய்க் குட்டிக்குச்
சோறு வைத்தேன்
வாலை ஆட்டுது
நண்பன் ஆக அருகில் வந்து
நக்கிக் கொஞ்சுது

சிட்டுக் குருவிக்கு
அரிசி போட்டேன்
கிட்ட வந்தது
தொட்டுத் தூக்கி அணைத்துக் கொண்டேன்
நண்பன் ஆனது

பூனைக் குட்டிக்குப்
பால் கொடுத்தேன்
மியாவ் என்றது
புதிய ஒரு நண்பன் ஆகச்
சேர்ந்து கொண்டது

அன்பு காட்டி
அணைத்துக் கொண்டால்
யாரும் நண்பரே
அம்மா அப்பா மட்டும் அல்ல
அனைத்தும் சொந்தமே

சிட்டுக் குருவிகள்

சின்னச் சிட்டுக் குருவிகள் நாம்
சிங்காரக் குருவிகள் நாம்
அன்னை தந்தை சொல்லைக் கேட்கும்
அழகான குருவிகள் நாம்

பள்ளிக் கூடம் சென்றிடுவோம்
பாட மெல்லாம் படித்திடுவோம்
துள்ளி விளையாடி ஒன்றாய்த்
துரத்திப் பிடித்து மகிழ்ந்திடுவோம்

ஒற்றுமை யாய்ப் பழகிடுவோம்
ஒன்றாகச் சேர்ந்திடுவோம்
கற்ற பாடம் தவறாமல்
கடைப் பிடித்து வாழ்ந்திடுவோம்

பழகிப் பார்

நீரில் நீந்தும் மீனைப் பார்
நிலத்தில் திரியும் மானைப் பார்

மணலில் ஊரும் நண்டைப் பார்
மலரில் அமரும் வண்டைப் பார்

கூவித் திரியும் குயிலைப் பார்
குதித்து ஆடும் மயிலைப் பார்

வானில் பறக்கும் குருவி பார்
வளைந்து ஓடும் அருவி பார்

அனைத்தும் இயற்கை அழகு பார்
அவற்றில் நீயும் பழகிப் பார்

ஒட்டகச் சிவிங்கி

ஒட்டகச் சிவிங்கி
ஒட்டகச் சிவிங்கி
ஓடாதே நில்லு
உயர்ந்த தலையை
உயர்த்தி எதைப்
பார்க்கிறாய் சொல்லு

நீண்ட கால்கள்
கொண்ட நீயும்
உயர்ந்து நிற்கிறாய்
நீண்ட கழுத்தை
நீட்டி எதனை
எட்டிப் பார்க்கிறாய்

கூடைப் பந்து
ஆடினால் நீ
வெற்றி பெறுவாய்
கூடைக் குள்ளே
பந்தைத் தூக்கிக்
குனிந்து போடுவாய்

கோழி

குஞ்சு களைக் கூட்டி அங்கே
கோழி மேயுது
கொத்திக் கிளறி கிண்டி உணவைக்
கொடுத்து மகிழுது

பருந்து வந்த போது அதனைத்
துரத்திக் கலைக்குது
பக்கு வமாய் சிறகுள் அணைத்துப்
பாது காக்குது

குஞ்சில் ஒன்று தொலைந்து விட்டால்
குழப்பம் அடையுது
தொலைந்த குஞ்சைத் தேடித் தேடித்
தூரப் போகுது

முழு நிலா

வானத்திலே முழுநிலா
வந்து தோன்றுதே
வரிசை வரிசை ஆகவெள்ளி
வானில் தெரியுதே

ஆகாஅந்த அழகுக் கோலம்
அதிசயம் அம்மா
அதனைப் பார்க்க ஆசையாக
இருக்கிற தம்மா

முற்றத்திலே வந்து நின்று
பார்த்து மகிழுவோம்
முகில் மறைக்கும் முன்னர் அதன்
அழகை இரசிப்போம்

வரிக்குதிரை

வரிக் குதிரையே வரிக் குதிரையே
எங்கே போகிறாய்
வரிகளை நான் எண்ணப் போகிறேன்
வந்து கொஞ்சம் நில்லு

வரிசை வரிசை ஆக இருக்கும்
வரிகளை எல்லாம்
வடி வாக உன் உடலில்
வரைந் தவர் யாரோ

குட்டிக் குதிரையோடு நானும்
குதித்து மகிழுவேன்
முட்டி என்னை இடிக்காதே
முன்னால் போய் நில்லு

ஊஞ்சல்

முற்றத் திலே மா மரம்
மூன்று கிளை மா மரம்
சுற்றி வந்து நாங்கள் அந்தக்
கிளை களிலே ஏறு வோம்

மரக் கிளையில் ஊஞ்சல் கட்டும்
வசதியினை ஆராய் வோம்
மாமா விடம் சொல்லி நல்ல
பலகை போட்டுக் கட்டுவோம்

உறுதி யான கயிறு கட்டி
ஊஞ்ச லிலே ஏறுவோம்
உன்னி உன்னி ஊஞ்சலிலே
உந்தித் தள்ளி ஆடுவோம்

தூக்கணாங் குருவி

தூக்கணாங் குருவியைப் பார்
கூடு கட்டுது
தும்பு தும்பாய் எடுத்துக் கட்டித்
தூங்க விடுகுது

கூட்டினுள்ளே வெளிச்சம் வர
என்ன செய்யுது
குருவி சென்று மின் மினியை
பிடித்து வருகுது

கூட்டுக்குள்ளே மின்னி மின்னிப்
பூச்சியை வைத்து
குஞ்சு களும் மகிழ இருட்டை
விரட்டி அடிக்குது

ஆமை - தவளை

தண்ணீரிலே வாழும் மீன்
தரையில் வாழாது
தரையினிலே வாழும் மான்
தண்ணீரில் வாழாது

தண்ணீரிலே வாழும் ஆமை
தரையிலும் வாழும்
தரையினிலும் தண்ணீரிலும்
தவளைகள் வாழும்

எங்கும் வாழப் பழகிக் கொண்டால்
துன்பமே இல்லை
இதனை நாங்கள் தெரிந்து கொண்டால்
இல்லையே தொல்லை

எறும்பு

வரிசை வரிசை யாகச் செல்லும்
சிறிய எறும்பே - பார்க்க
வடிவாக இருக்கிறது
உனது ஒழுங்கே

சுறுசுறுப்பாய் நடந்து நீயும்
எங்கே செல்கிறாய் - உந்தன்
சுற்றம் சூழ வரிசையாக
எங்கே செல்கிறாய்

அம்மா போட்ட அரிசிக் கோலம்
அங்கே பார்த்தாயா - நீ
அதனை உண்டால் பசியுந் தீரும்
அலைச்சலும் தீரும்

மழை வருமா வெயில் வருமா
எனக்கதைச் சொல்லு - நான்
மாமா வீட்டில் விளையாடப்
போய்வர வேண்டும்

அகளங்கனின்
சின்னஞ் சிறிய சிறகுகள்

வாசிக்கத் தெரியாத குழந்தைகளுக்குச்
சொல்லிக் கொடுத்தால்,
இந்தப் பாடல்களை இனிமையாகப் பாடுவர்.
குழந்தைகளை ஆடச் சொன்னால்,
இந்தப் பாடல்களைப் பாடி ஆடுவர்.

- டாக்டர் ஓ.கே.குணநாதன்

எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய வெளியீடு

Rs.300/-

ISBN 978-955-8715-84-0
9 789558 715840